**தலைப்பு – 123 நிர்மாணம், பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

1. ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை
2. ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டு கணக்கிற்குரிய விபரமான அறிக்கை.

பகுதி I

**நிர்மாணம், பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| **தலைப்பு** | **திணைக்களம்** |
| --- | --- |
| 309 | கட்டிடத் திணைக்களம் |
| 310 | அரசாங்க தொழிற்சாலை |
| 311 | தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 3,018,422,253 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 2,442,438,408 பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்புகள் ரூபா 5,249,997 தொகைக்கும் ரூபா 532,017,595 தொகைக்கும் இடையிலான வீச்சில் அதாவது தேறிய ஏற்பாட்டில் 3 சதவீதத்திற்கும் 21 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் தேறிய ஏற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் | மூலதனம் | மீண்டெழும் | மூலதனம் | மீண்டெழும் | மூலதனம் |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 123 | நிர்மாணம் பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு | 317,210,000 | 2,212,975,253 | 300,133,926 | 1,698,033,732 | 17,076,074 | 514,941,521 |
| 309 | கட்டிடத் திணைக்களம் | 234,771,000 | 20,145,000 | 216,569,225 | 17,832,499 | 18,201,775 | 2,312,501 |
| 310 | அரசாங்க தொழிற்சாலை | 53,286,000 | 31,225,000 | 52,210,650 | 14,098,373 | 1,075,350 | 17,126,627 |
| 311 | தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் | 144,335,000 | 4,475,000 | 139,359,552 | 4,200,451 | 4,975,448 | 274,549 |
| மொத்தம் | | 749,602,000 | 2,268,820,253 | 708,273,353 | 1,734,165,055 | 1,328,647 | 534,655,198 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

பல்வேறு நோக்கங்களிற்காக ஏனைய இரண்டு திணைக்களங்களினால் ரூபா 536,150,428 மொத்தமான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| திணைக்களம் | கிடைத்த ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் சேமிப்பு | சேமிப்புக்கான அவதானிப்பின் பொழிப்பு |
|---|---|---|---|---|
| கட்டிடத் திணைக்களம் | 534,665,428 | 346,270,307 | 188,395,121 | போதியளவு கட்டுநிதி கிடைக்காமை, ஒப்பந்தக்காரருக்கு வேலைகளை இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமையால் தாமதம் ஏற்பட்டிருந்தமை, பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை, சேவை வழங்குனருக்கு எஞ்சிய தொகைகள் செலுத்தப்பட்டிருக்காமை அல்லது அரசாங்க வருமானத்திற்கு எடுத்திராமை |
| தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் | 1,485,000 | 1,000,000 | 485,000 | பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் பின்வருமாறு.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 123 | 12301 | 9,000,000 | 7,657,693 | 4,000,000 | 8,553,277 | 80,000,000 | 23,497,785 |
| 309 | 30901 | 20,000,000 | 12,158,356 | 12,000,000 | 17,729,093 | 95,000,000 | 45,202,522 |
| 310 | 31001 | 28,000,000 | 18,437,053 | 18,000,000 | 23,119,299 | 127,000,000 | 88,871,083 |
| 311 | 31101 | 15,000,000 | 7,287,661 | 7,000,000 | 11,651,331 | 106,000,000 | 36,865,991 |

### 2.2.2 வியாபார முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களினால் வியாபார முற்பணக் கணக்குகள் பேணப்பட்டிருந்தன.

**(அ) பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அரசாங்க தொழிற்சாலை வியாபார முற்பணக் கணக்கிற்காக பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான மீதிகள் பின்வருமாறாகும்.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 310 | 31003 | 325,000,000 | 322,022,593 | 280,000,000 | 322,455,300 | 180,000,000 | 126,038,528 | 5,000,000 | 2,226,492 |

**(ஆ) நிதி விளைவுகள்**

இரு வியாபார முற்பணக் கணக்குகளின் நிதி விளைவுகள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

| திணைக்களம் | விடய இல. | முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் | நிதி விளைவுகள் 2012 (கருதுகோள் கட்டணம் நீங்கலாக) | 2012 (கருதுகோள் கட்டணம் நீங்கலாக) | 2011 (கருதுகோள் கட்டணம் நீங்கலாக) | 2011 (கருதுகோள் கட்டணம் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| அரசாங்க தொழிற்சாலை | 31003 | செய்யப்பட்ட வேலை முற்பணங்கள் கணக்கு | 101,485,931 | 101,284,931 | 104,088,207 | 103,887,207 |

### 2.2.3 வியாபாரமற்ற முற்பணக் கணக்குகள்

**பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சின் கீழ் உள்ள திணைக்களமொன்றின் வியாபாரமற்ற முற்பணக் கணக்கு நடவடிக்கை ஒன்றுக்காக பாராளுமன்றத்தினால் பின்வரும் எல்லைகள் விதிக்கப்பட்டிருந்ததுடன் பொறுப்பு எல்லையினைத் தவிர்த்து ஏனைய எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| தலைப்பு | விடய இல. | செலவினம் ஆகக் கூடிய எல்லை | செலவினம் உள்ள படியானது | பெறுவனவுகள் ஆகக் குறைந்த எல்லை | பெறுவனவுகள் உள்ள படியானது | வரவு மீதி ஆகக் கூடிய எல்லை | வரவு மீதி உள்ள படியானது | பொறுப்புகள் ஆகக் கூடிய எல்லை | பொறுப்புகள் உள்ள படியானது |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 310 | 31002 | 130,000,000 | 125,346,384 | 120,000,000 | 134,817,796 | 40,000,000 | 30,687,057 | 20,000,000 | 21,242,636 |

### 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

**(அ) கட்டுநிதி கணக்குகள்**

அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் 2012 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநிதி கணக்கு மீதிகளின் ரூபா 4,478,795 தொகையானதுடன் இது தொடர்பான விபரம் பின்வருமாறு காணப்பட்டது.

| திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| கட்டிடத் திணைக்களம் | 196,006 |
| அரசாங்க தொழிற்சாலை | 4,282,789 |
| **மொத்தம்** | **4,478,795** |

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 725,176,215 ஆனதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இல | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| நிர்மாணம் பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு | 6000/0000/000/00/150079 | 3,681,453 |
| கட்டிடத் திணைக்களம் | 6000/0000/000/00/150163 | 68,126,472 |
| | 6000/0000/000/00/150176 | 627,232,998 |
| அரசாங்க தொழிற்சாலை | 6000/0000/000/00/150164 | 1,349,297 |
| | 6000/0000/000/00/150046 | 24,032,254 |
| தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் | 6000/0000/000/00/150165 | 753,741 |
| மொத்தம் | | 725,176,215 |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 123 – நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 11 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு

என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

(i) கட்டுநிதிகள் கிடைத்திருக்காமை காரணமாக இரண்டு மூலதன செலவின விடயங்களிற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 63,000,000 தொகையான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) போதியளவில் கட்டுநிதிகள் கிடைத்திருக்காமை காரணமாக 27 மூலதன செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,375,775,253 தொகையான மொத்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது ஏறத்தாழ 15 சதவீத்தினைக் கொண்டிருந்தது.

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,008,578 தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

12301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 71,670 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று அமைச்சினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 1.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 நவம்பர் 01 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை செயற்படுத்தல்

சரியான படிமுறைகள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளும் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை செயற்படுத்தும் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 1.5 செயலாற்றல்

### (அ) போதியளவில் அடையப்படாத பிரதான செயற்பாடுகள்

அமைச்சினால் பிரதான செயற்பாடுகள் போதியவில் அடையப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பமொன்று கீழே தரப்பட்டுள்ளன.

தேசிய நிர்மாணித்தல் கொள்கை, தேசிய வீடமைப்புக் கொள்கை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டம் என்பவற்றை செயல்வலுப்படுத்தும் பணிகள் 2012 திசெம்பர் 31 வரையிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) நீண்டகால தாமதத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்காத செயற்பாடுகள்

2008 யூன் 12 ஆந் திகதிய அமப/08/0905/344/010 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், பொதுவான கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகி அரசாங்க நிர்மாண நிறுவனங்களிற்கு கையளிக்கப்படுகின்ற கட்டிட மற்றும் பொறியியல் ரீதியான ஒப்பந்தங்கள் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் அவற்றிற்கு செலுத்தவேண்டிய விலைகள் சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் திரட்டிய நிதியத்தின் கீழ் கையேற்கப்படுகின்ற ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளிற்கு தலையீடு செய்வதற்கும் நிரந்தர தொழில்நுட்பக் குழுவொன்று 2008 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களிற்கு அமைய, 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்த

நிரந்தர தொழில்நுட்பக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒப்பந்த மதிப்பீடுகள் மற்றும் அவற்றுக்கு செலுத்தப்பட வேண்டிய 134 கூறு விலை கோரிக்கைகள் சம்பந்தமான குழுவின் தீர்மானங்கள் 2013 யூலை 31 ஆந் திகதி வரையிலும் வழங்கப்படாதிருந்ததுடன் தாமதமானது 01 முதல் 05 ஆண்டுகளிற்கு இடைப்பட்டதாக காணப்பட்டது. இத் தாமதம் காரணமாக ஒப்பந்தங்களின் வேலைகளை பூரணப்படுத்த முடியாதிருந்தமை, இறுதி விலைப்பட்டியல்களிற்காக கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தமை, பிடி காசினை விடுவிக்க முடியாதிருந்தமை போன்ற பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.

பூரணமற்ற கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை, அமைச்சரவை அங்கீகாரத்தை மீறிய மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை, சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அளவுத்திட்ட பட்டியல்கள் திருத்தப்பட்டிருந்தமை, விளக்கமளிப்புக்களைப் பெற்றுக்கொள்கையில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தமை மற்றும் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை போன்றன இதற்கான காரணங்களாகும் என அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) திட்டமிடுதல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செயற்படாமை**

பின்வரும் சந்தர்ப்பங்களில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, "ஜனசெவன" வீடமைப்புத் திட்டத்திற்குரிய நிதிசார் இலக்குகளின் செயன்முன்னேற்றம் ஏறத்தாழ 54 சதவீதமாகும்.

(ii) கனவு இல்லம் இரண்டாவது செயற்திட்டத்திற்குரிய நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் முறையே ரூபா 3,800,000 ஆகவும் 100 சதவீதமாகவும் காணப்பட்ட போதிலும், செயன்முன்னேற்றம் முறையே ரூபா 1,800,000 ஆகவும் 47 சதவீதமாகவும் மாத்திரம் காணப்பட்டன.

(iii) கஹதுடுவ செயற்திட்டத்திற்குரிய நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் முறையே ரூபா 50,000,000 ஆகவும் 100 சதவீதமாகவும் காணப்பட்ட போதிலும், செயன்முன்னேற்றம் முறையே ரூபா 29,700,000 ஆகவும் 59 சதவீதமாகவும் மாத்திரம் காணப்பட்டன.

(iv) மத்தேகொட செயற்திட்டத்திற்குரிய நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் முறையே ரூபா 42,000,000 ஆகவும் 100 சதவீதமாகவும் காணப்பட்ட போதிலும், செயன்முன்னேற்றம் முறையே ரூபா 11,100,000 ஆகவும் 25 சதவீதமாகவும் மாத்திரம் காணப்பட்டன.

(v) ஜனசெவன "கப்ருக" செயற்திட்டத்திற்குரிய நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் முறையே ரூபா 15,000,000 ஆகவும் 100 சதவீதமாகவும் காணப்பட்ட போதிலும், செயன்முன்னேற்றம் முறையே ரூபா 5,900,000 ஆகவும் 39 சதவீதமாகவும் மாத்திரம் காணப்பட்டன.

**1.6 நட்டங்களும் இழப்புக்களும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட நட்டங்களும் இழப்புக்களும் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அமைச்சுக்கு சொந்தமான வாகனமொன்று 2012 ஏப்ரல் 07 ஆந் திகதி விபத்துக்கு உள்ளாகியமையால் ரூபா 1,624,068 நட்டம் ஏற்பட்டிருந்தது. அந்த நட்டத்திலிருந்து ரூபா 427,038 தொகை காப்புறுதியினால் மேவப்படாதிருந்ததுடன் அது தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(04) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

அமைச்சின் கீழுள்ள சில நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்டிருந்த செயன்முன்னேற்ற அறிக்கைகள் பூரணமற்றவையாக காணப்பட்டன. பூரணமற்ற செயன்முன்னேற்ற அறிக்கைகள் கையேற்கப்பட்டிருந்ததுடன் அவற்றை பூரணப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய அமைச்சின் கீழுள்ள சில நிறுவனங்களின் செயலாற்றல் தொடர்பில் உரிய மேற்பார்வை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, “ஜனசெவன” வீடமைப்புத் திட்டத்திற்குரிய பௌதீக இலக்கு 58,883 வீடுகளாக காணப்பட்ட போதிலும், செயன்முன்னேற்ற அறிக்கையில் உள்ளபடியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டிருக்காமையால் செயன்முன்னேற்றத்தை அளவிட முடியவில்லை.

(ஆ) அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாத நிர்மாணங்களை உடைக்கும் செயற்திட்டத்திற்குரிய நிதிசார் இலக்கு ரூபா 2,000,000 ஆக காணப்பட்டதுடன், அவற்றின் பௌதீக செயன்முன்னேற்றம் 2012 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 5 சதவீதம் எனக் காட்டப்பட்டிருந்தது. ஏனைய காலாண்டுகளின் பௌதீக செயன்முன்னேற்றங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 1.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 20 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 87 | 73 | 14 |
| (iv) | ஆரம்ப நிலை | 44 | 35 | 09 |
| | மொத்தம் | 162 | 131 | 31 |

## 2 ஒதுக்கீட்டுத் தலைப்பு 309 – கட்டிடங்கள் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கட்டிடங்கள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 11 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்,

கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக் கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

## 2.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கட்டிடங்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்று என்பன இங்கு (அ) முதல் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் என்பவற்றைத் தவிர திருப்திகரமாக தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணப்படாமை

(i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிராகரம், நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) தகவல்கள் உள்ளடங்கிய கோவைகள் போன்ற அவசியமான சான்றுகள் திணைக்களத்தில் இல்லாதிருந்த காரணத்தால், இனங்காணப்பட்டிருந்த ரூபா 732,711 தொகையான வாகன நட்டமொன்று தொடர்பில் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஆய்வு செய்ய இயலாதிருந்தத. இந்த வாகனம் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் அமைச்சின் பாதுகாப்பு பிரிவிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததாகவும் வாகனத்தின் சில பாகங்கள் கழற்றி எடுக்கப்பட்டு மீண்டும் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தாகவும் அப் பாகங்களை மீள வழங்கி திருத்தியமைப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா 116,775 தொகையை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் திணைக்களத் தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 54,899,287 தொகையான 211 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 94,286 தொகை கொழும்பு தலைமை பொறியியலாளர் (பராமரிப்பு) அலுவலகத்தின் மீண்டெழும் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(iii) தொல்பொருளியல் திணைக்களத்தின் நிர்மாணம் மற்றும் பதுபார்த்தல் பணிகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பணத்தில் உரிய பணிகள் செயற்பாடுகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சியிருந்த ரூபா 1,142,120 தொகை அந்த திணைக்களத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(இ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

விடய இலக்கம் 30901 உடைய அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் அறவீடு நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 572,770 ஆக காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதிகளை அறவிட முடியாதிருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம், திணைக்களத்தினால் தயாரிக்கப்படவேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 நவம்பர் 01 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஏஎம்/2009 (1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, நிர்மாணம், பொறியியலாளர் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினாலேனும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை செயற்படுத்தல்

சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் தொடர் நடவடிக்கை எடுத்தல் ஆகிய எண்ணங்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்படாமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை செயற்படுத்தும் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| நிதிப்பிரமாணம் 135 | 241,275,062 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத பிரதித் தலைமைப் பொறியியலாளர் பதவிக்கு, தலைமைப் பொறியிலாளர் அலுவலகக் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தது. மேலும் கொழும்பு தலைமை பொறியியலாளர் (பராமரிப்பு) அலுவலகத்தின் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகரித்தல் ஆகிய இரு பணிகளும் ஒரு உத்தியோகத்தராலேயே நிறைவேற்றப்பட்டிருந்தது. |
| நிதிப்பிரமாணம் 138 | 277,972 | கொழும்பு தலைமைப் பொறியியலாளா (பராமரிப்பு) அலுவலகத்தில் சான்றுறுதிப்படுத்தப்படாதிருந்த 05 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2.6 செயற்திட்டங்களை அமுலாக்குவதிலான நலிவுகள்

---

### செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

---

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யவேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலான செலவினங்கள் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலகத்திற்கான புதிய கட்டிடமொன்றினை நிர்மாணித்தல் | 16,800,000 | 2010.02.15 | 2012.08.14 | 9,520,000 | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் ஒப்பந்ததாரராக செயற்பட்டிருந்து. அந்த நிறுவனத்தின் நிதிப் பற்றாக்குறை காரணமாக செயற்திட்டம் தாமதமடைந்திருந்தது. |
| அரிசி ஆராய்ச்சி நிறுவகத்தின் பரிசோதனைக் கூடமொன்றினை நிர்மாணித்தல் மற்றும் மின் பாரந்தூக்கியொன்றினை பொருத்துதல் | 110,110,000 | 2008.05.23 | 2010.05.23 | 18,995,041 | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் ஒப்பந்ததாரராக செயற்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தின் நிதிப் பற்றாக்குறை காரணமாக இந்த செயற்திட்டம் தாமதமடைந்திருந்தது. |
| அரிசி ஆராய்ச்சி நிறுவகத்தின் சம்பாந்துறை உத்தியோகபூர்வ இல்லத்தினை நிர்மாணித்தல் | 7,680,000 | 2012.06.27 | 2012.08.31 | 3,900,000 | ஒப்பந்ததாரரின் தாமதத்தினால் பணிகள் தாமதமாயின. (கிடைக்கப்பெற்ற நிதியேற்பாடு ரூபா 7,400,850 ஆக இருந்த போதிலும் ரூபா 5,585,635 கணக்கீட்டு ஆண்டு முடிவடைந்தமையால் திருப்பியனுப்பப்பட்டிருந்தது. |
| பதுளை குருதலாவை அஞ்சல் அலுவலகத்தை நிர்மாணித்தல் | 11,850,000 | 2012.06.17 | 2012.11.15 | 6,640,000 | அதிக மழை மற்றும் பாதுகாப்புக் கூடத்தின் கதவுகளைப் பொருத்துவதிலான தாமதம். |

## 2.7 செயலாற்றல்

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

கட்டிடங்கள் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பமொன்று பின்வருமாறு.

அரச திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் செலவினத் தலைப்புகளின் கீழ் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த எல்லைகளினுள் கட்டிடத்திற்கான திட்டங்களை நிர்மாணித்தல், மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் நிர்மாணித்தல் என்பன திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். எனினும் அப்பணிகளுக்காக 2012 ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டின் மூலம் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் செலவினத் தலைப்பிற்காக ரூபா 122,044 மில்லியன் மொத்தப் பணம் ஒதுக்கப்பட்டிருந்ததெனினும் ரூபா 1,259 மில்லியன், அதாவது 1.03 சதவீதமான 127 செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தன. திணைக்களத்தின் பிரதான குறிக்கோளை இலக்கிட்டு உரிய நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கோ அல்லது அது தொடர்பில் போதியளவான கவனம் செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவாறிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் நடைமுறையிலிருந்தான விலகல்கள்

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 3.8 ஆம் பிரிவில் காணப்படும் அவசர கொள்வனவு முறையை பயன்படுத்தி, பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளுக்காக ஒப்பந்ததாரர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தமையால் அந்த வழிகாட்டல்கள் கோவையின் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள போட்டி அடிப்படையில் செயற்படுவதிலிருந்து திணைக்களம் விலகியிருந்தது. இதன் பிரகாரம் செயற்பட்டு 2007 ஒக்தோபர் மாதம் முதல் 2011 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியினுள் ரூபா 530,757,701 பெறுமதியான மற்றும் 2012 ஆம் ஆண்டின்போது ரூபா 135,873,040 பெறுமதியான பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ii) மாதிரிக்குரிய 03 பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளின் ரூபா 22,156,020 மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயமுடைய கொழும்பு பிரதான பொயியிலாளரால் (பராமரிப்பு) 19 பிரிவுகளுக்கு வகைப்படுத்தி மேற்குறிப்பிடப்பட்டவாறு தெரிவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்ததாரர்களுக்கு 19 நிகழ்ச்சித்திட்டங்கள் வெளியிடப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தன.

## (ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2012 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்படாதிருக்கையில் 2011 ஆம் ஆண்டில் பதிவு செய்த ஒப்பந்ததாரர்களுக்கு 2012 சனவரி மாதம் முதல் பெப்ரவரி 28 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் 12 பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் அதிகாரமின்றி கொழும்பு தலைமைப் பொறியியலாளர் (பராமரிப்பு) இனால் கையளிக்கப்பட்டிருந்தது. இதன் மொத்தப் பெறுமதி ரூபா 6,665,738 ஆகும்.

(ii) மொத்தப் பெறுமதி ரூபா 20 மில்லியன் நிதி எல்லையினுள் ஒப்பந்ததாரரொருவருக்கு பணிகளைக் கையளிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததெனினும், கொழும்பு தலைமைப் பொறியியலாளரால் (பராமரிப்பு) அந்த நிதி எல்லையினை மிகைத்து இரு ஒப்பந்ததாரர்களுக்கு 28 சந்தர்ப்பங்களில் பணிகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 20 மில்லியனான நிதி எல்லையினை விஞ்சிய மொத்தப் பெறுமதி ரூபா 14,681,574 ஆகும்

## (இ) ஏனையவை

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொழும்பு தலைமைப் பொறியியலாளரால் (பராமரிப்பு) Special Schedule of Rate (SSR) பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு வேலைச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், பணி நிறைவேறியதன் பின்னர் ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட உண்மையான பற்றுச்சீட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு SSR பெறுமதிகள் மீளத் திருத்தப்பட்டு முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும், 2010 யூன் 23 ஆந் திகதிய 02/2010 ஆம் இலக்க கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், SSR பெறுமதிகளுக்கான கொடுப்பனவே வழங்குவதற்கு முன் தலைமை அலுவலக முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரம் பெறப்படவேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- SSR பெறுமதிகளை மதிப்பிடும் போது, பொருட் பெறுமதியினை உறுதிப்படுத்துவதற்காக சந்தை விலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட உண்மையான பற்றுச்சீட்டகளை அடிப்படையாகக் கொண்டு SSR பெறமதிகளை திருத்தும் நடைமுறை சர்ச்சைக்குரியதாகும்.

- SSR பெறுமதிகளுக்கான அங்கீகாரத்தினை வழங்குவதில் தாமதம் நிலவுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டது.

* ஒன்பது வேலைத்திட்டங்களுக்கென தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 7,286,566 மொத்தப் பெறுமதியான SSR பெறுமதிகளுக்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு முன்னர், முழுமையாக ஒப்பந்தகாரர்களுக்கு மொத்தக் கொடுப்பனவும் வழங்கப்பட்டிருந்தது.

(ii) குறித்த பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்பு பணிகளை ஆரம்பித்ததன் பின்னர் மற்றும் அநேக சந்தர்ப்பங்களில் பணி பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ஒப்பந்ததாரர்களுக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. (2012 மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் கொழும்பு தலைமை பொறியியலாளர் (பராமரிப்பு) இனால் வழங்கப்பட்டிருந்த ரூபா 108,445,767 மொத்தக் கிரயமான 207 நிகழ்ச்சித்திட்டங்களில் ரூபா 26,106,434 மொத்தக் கிரயமான 48 நிகழ்ச்சித்திட்டங்களினது பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அல்லது பணி பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் வெளியிடப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களானதுடன், அது 23 சதவீதமாகவும் இருந்தது.) இது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பிரதானமான நலிவொன்றாகும் அதே வேளை, நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நிபந்தனைகளின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்படாமல் ஒப்பந்ததாரர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்வதற்கும் இதன் மூலம் இடமளிக்கப்பட்டிருந்தது.

## 2.9 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

**தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்**

திணைக்களங்களுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குக் குழுவால் பரிசீலிக்கப்பட்டதையடுத்து தொடர் நடவடிக்கை பூர்த்தியாகாதிருந்த கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2009 | 05 (இ) | பிராந்திய பொறியியலாளர் அலுவலகங்களில் கொடுப்பனவுகள் முறையற்றிருந்தமை மற்றும் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுவிற்கு பிரதான கணக்காளர் நியமிக்கப்படாதிருந்த காரணம் என்பவற்றால் ஏற்படும் உள்ளகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக உடனபடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2012 திசெம்பா 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலமை கீழ்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 110 | 65 | 45 |
| (ii) | மூன்றாம் நிலை | 23 | 03 | 20 |
| (iii) | இரண்டாம் நிலை | 208 | 169 | 39 |
| (iv) | ஆரம்ப நிலை | 178 | 138 | 40 |
| | மொத்தம் | 519 | 375 | 144 |

## 3. ஒதுக்கீட்டுத் தலைப்பு 310 - அரசாங்கத் தொழிற்சாலை

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசாங்கத் தொழிற்சாலையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 நவெம்பர் 11 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவு செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும், அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பனவற்றை இலங்கை சனநாயக கோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்ப பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச்

சமர்ப்பித்தல் என்பவற்றிற்கான உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடல், செயற்படுத்தல், பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

### 3.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்கத் தொழிற்சாலையின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே(அ) தொடக்கம் (உ) வரையான பொது அவதானிப்புகள் மற்றும் கீழே 3.4 தொடக்கம் 3.12 வரையான பந்திகளில் காணப்படும் பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் என்பவற்றைத் தவிர, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுளன என அவதானிக்கப்பட்டது.

(அ) பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

(i) திணைக்களம் பின்வரும் பதிவேடுகளை முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணாதிருந்தமை தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| செயல்நிமித்த உபகட்டு நிதிப்பதிவேடு | நிதிப்பிரமாணம் 371 |
| வாகனப்பதிவேடு, சம்பவப் பதிவேடு மற்றும் ஓட்ட அட்டவணைகள் | 1999 பெப்ரவரி 22 ஆந் திகதிய 6/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 அந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| நட்டங்கள் மற்றும் இழப்புகளுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

(ii) கடன் கோவைகள் மற்றும் தொடர்புடைய ஏனைய தகவல்கள் ஆகிய தேவையான சான்றுகள் திணைக்களத்தில் இல்லாமையால் ரூபா 165,379 கூட்டுத்தொகையுடையதும் 06 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டதுமான கடன் மற்றும் கடனை அறவிடல் தொடர்பாக கணக்காய்வில் திருப்திரகமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) வரவு, செலவுத்திட்ட சலுகைச் சேவைகள் மற்றும் அவசரகாலத் தேவைகளுக்கான பொறுப்புச் செற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதியேற்பாடு

(i) கட்டுநிதி பெறப்படாமையால், மூலதனச் செலவின விடயங்களுக்கென குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடாகிய ரூபா 11,500,000 சேமிப்புக்குள்ளானது.

(ii) மூலதன செலவின விடயங்களுக்காகக் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடாக வழங்கப்பட்ட ரூபா 5,500,000 பயன்படுத்தப்பட்டதன்

பின்னர் ரூபா 4,336,645 எஞ்சியிருந்ததுடன் அது மொத்த நிதியேற்பாட்டின் 78 சதவீதமாகவும் இருந்தது.

(இ) கட்டுநிதிக் கணக்கு

நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் பணி முடிவுற்றதும் பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், பணி முடிவடைந்து 01 தொடக்கம் 03 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் செயல்நிமித்த உபகட்டுநிதியாகிய ரூபா 155,651 தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

விடய இலக்கம் 31001 உடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,103,512 தொகையும், சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 312,550 தொகையும், சேவை நீங்கிய உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 721,152 தொகையும் என அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 2,137,214 ஆகும். அந் நிலுவை மீதிகளை அறவிட முடியாதிருந்தது.

(உ) வணிக முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட வணிக முற்பணக் கணக்கு தொடர்பாக பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது.

(ii) விடய இலக்கம் 31003 உடைய செய்த வேலைகளுக்கான முற்பணக் கணக்கில் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது 811 நிறுவனங்களிலிருந்து அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 82,575,255 ஆகும். அந்நிலுவை மீதிகளை அறவிட முடியாதிருந்தது.

## 3.4 நல்லாளுகைளும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎவ்/ஆர்/2/2/3/5/(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்படும் 2002 செப்டம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதி ஒன்றுடன் நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 நவம்பர் 01 ஆந் திகதியளவிலும் அது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.4.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 ஜுன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, நிர்மாண, பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு மூலமேனும் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் செயற்பாடு

சரியான நடவடிக்கைகள் மற்றும் தொடர் நடவடிக்கை நோக்குடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் என்பன மீளாய்வு செய்யப்படாமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களது செயற்பாட்டினது நோக்கம் ஈடேறவில்லை.

### 3.5 சொத்து முகாமைத்துவம்

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | கூறுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| (i) | காணி | 02 ஏக்கருக்கு மேற்பட்டவை | 20 ஆண்டுகளுக்கு அதிகமாக அத்துமீறிக் குடியேறியோரால் பயன்படுத்தப்பட்டவாறிருந்தது உறுதியாயிற்று. |
| (ii) | கட்டிடம் (உத்தியோகபூர்வ மனை) | 02 | 01 ஆண்டு |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 03 | இரண்டு மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்படாதிருந்த காலத்தைக் கண்டுபிடிப்பதற்கு முடியாதிருந்ததுடன் ஒருவாகனம் 02 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதுமிருந்தது. |
| (iv) | இயந்திர சாதனம் | | |
| | உலோகப் பொருட்களை அகற்றுவதற்கான இயந்திரம் | 01 | 10 ஆண்டிற்கு மேலாக |
| | பவுடர் கோட்டிங் இயந்திரச் சாலை | 01 | 01 ஆண்டிற்கு மேலாக |
| | தகரம் வெட்டும் இயந்திரம் | 01 | 02 ஆண்டுகளுக்கு மேலாக |

## 3.6 இணங்காமை

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இனங்காமை

கணக்காய்வுத் தெரிவுச் செய்வையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| (i) | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | தாபன விதிக் கோவை | | |
| | தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தினது 1:1 மற்றும் 2:3 ஆம் உப பிரிவுகள் | 30,260,000 | நிறைவேற்றுதரத்தினருக்கு குறித்த சதுர அடி அளவிற்கும் குறைவாக 08 வீடுகள் அமைக்கப்பட்டு அவை தரப்படுத்தப்படாதிருந்தன. |
| | தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தினது 4:2 ஆம் உப பிரிவு | - | நிறைவேற்று தரத்தினருக்கான உத்தியோகபூர்வ மனைகள், நியாயமான கொள்கை இல்லாது வழங்கப்பட்டிருந்ததுடன் அவை நிறைவேற்று தரமற்ற உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன. |
| | தாபன விதிக்கோவையின் XIX அத்தியாயத்தினது 6:1 ஆம் உப பிரிவு | - | குத்தகைக் காலமான 05 ஆண்டுகளுக்கு அதிகமாக மனைகளில் தங்கியிருந்த 16 சந்தர்ப்பங்கள் நிலவின. |

## 3.7 செயலாற்றல்

### திட்டமிடல்

#### வருடாந்த செயல் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல் திட்டத்திற்கு இணங்காமல் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கேற்ப இலக்கிடப்பட்ட வருமானம் | வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளுக் கேற்ப இலக்கிடப்பட்ட வருமானம் | முன்னேற்ற மீளாய்வு அறிக்கைளுக்கேற்ப வருடாந்த முன்னேற்றம் | வருடாந்த முன்னேற்ற சதவீதம் | |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| தெதுறுஓயா செயற்திட்டம் - 8 வான் கதவுகளை நிர்மாணித்துப் பொருத்துதல் | 155 | 50 | 19.69 | 13 | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி |
| அத்திக்காவ செயற்திட்டம் - 4 வான் கதவுகளை நிர்மாணித்தல் | 30 | 8.33 | 4.03 | 13 | |
| கெலிகம செயற்திட்டம் - 4 வான் கதவுகளை நிர்மாணித்தல் | - | 5 | 1.38 | 28 | செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி |

## 3.8 வங்கிக் கணக்குச் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகள்

அரசாங்கத் தொழிற்சாலை நிதிக் கட்டுப்பாட்டில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை கடைப்பிடிக்கப்படாததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களின் சரியான தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை தொடர்பாகவோ அல்லது அத்தினத்தில் உள்ளவாறான வங்கி மீதிகளது சரியான தன்மை தொடர்பாகவோ கணக்காய்வில் தீருப்தியடைய முடியாதிருந்தது. அதற்கான காரணங்கள் பின்வருமாறு.

(அ) 2013 செப்டம்பர் 15 ஆந் திகதியளவிலும் 2013 ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையிலான 8 மாத கால வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படாதிருந்தன.

(ஆ) 2012 திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று 2013 ஏப்ரல் மாதத்திலேயே தயாரிக்கப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் தயாரிப்பு மற்றும் பரிசீலனை என்பன கைச்சாத்திடப்படாதிருந்தன.

(ஈ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்று சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனப் பின்வரும் விடயங்கள் காரணமாக உறுதியாயிற்று.

(i) வங்கிக் கணக்கிணக்கத்தில் தேறாத வைப்பாக ரூபா 8,242 காட்டப்பட்டிருந்தது. ஆயினும், காசேட்டின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 28,242 ஆகும்.

(ii) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த காசோலைக்குரிய ரூபா 23,408 வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலையாக வங்கிக் கணக்கிணக்கத்தில் காட்டப்பட்டிருந்தது.

(iii) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 28,938 பெறுமதிவாய்ந்த காசோலையானது வங்கிக் கணக்கிணக்கத்தில் ரூபா 22,282 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(iv) 2012 நவம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கத்தின் படி பெறுமதி ரூபா 141,091 ஆகவுள்ள 2 காசோலைகள் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாது அக்காசோலைகள் 2012 திசெம்பரின் போதும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அந்தப் பெறுமதி வங்கிக் கணக்கிணக்கத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(v) காசேட்டின் பிரகாரம் வழங்கப்பட்ட காசோலையாக இனங்காணப்பட முடியாதிருந்த ரூபா 86,682 மொத்தப் பெறுமதியுடைய 4 காசோலைகள் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 3.9 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தின் சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மை வாய்ந்தவையாக இருந்தன. தெரிவுச் செவ்வைகளின் போது அவ்வாறு காணப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்களின் விபரம் வருமாறு.

(அ) வழங்குநர்களுக்கு அனுப்பப்பட்ட மூலப்பொருட்களின் மாதிரிகள் அலுவலகக் கோவைகளில் இணைக்கப்படாமை, பொருட்களை வழங்குவதற்கு முன்பு மொத்தத் தொகையான ரூபா 31,500 வழங்குநருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டமை அதன் நிமித்தம் நியமங்களுக்கு ஒவ்வாது பெறப்பட்ட பொருட்களை திருப்பி அனுப்புகையில் வழங்குநர் அவற்றை ஏற்க மறுத்தமை பொருள் மாதிரியை விட வேறுபட்ட மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வு நேரடிப் பரிசோதனையில் உறுதியாகியபோதும், திணைக்களத்தின் சட்ட உதவியாளர் விசாரணை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுப் பெறப்பட்ட விசாரணை அறிக்கையின் தவறான சிபாரிசின் பேரில் பொருட்கள் அனைத்தும் மீண்டும் பொறுப்பேற்கப்பட்டமை ஆகிய விடயங்களின் காரணமாக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட தொழிலாளர்களது 18 மேலங்கிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாகின.

(ஆ) தேவைக்குப் பொருந்தாத 1,000 கிலோ கிராம் Powder Coating Powder கொள்வனவு செய்யப்படுவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 560,000 செலவிடப்பட்டிருந்தது. அதற்கான மாதிரி சரியானதே என தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு சிபாரிசு வழங்கியதன் பின்னர் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தமையால் பொருட்களை மீளப்பெற முடியாது என வழங்குநர் மறுப்புத் தெரிவித்திருந்தார்.

(இ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 29,000 செலவில் 02 Dryer Element கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. தேவைகளும் நியமங்களும் சரிவர இனங்காணப்படாமையால் பணிக்கேற்ற பொருத்தமானதும் அவசியமானதுமான

பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டனவா என்பதை உறுதி செய்ய முடியாதிருந்தது. மேலும், வழங்குநரின் பெயரும் முகவரியும் கொண்ட இன்வொய்சுக்கே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பற்றுச்சீட்டுக்கள், பொருட் பெறுவனவுப் பத்திரம், கையிருப்புப் பதிவேட்டிலுள்ள பதிவுகளுடனான தொடர்பு மற்றும் வழங்கற் கட்டளை போன்ற உறுதிப்படுத்தும் சான்றுகள் இருக்கவில்லை. 1634 ஆம் இலக்க வேலைப்பத்திரத்தின் பொருட்டு இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அதனோடு தொடர்புடைய கோவையின் பிரகாரம் 02 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை அல்லது குறித்த பணிக்காக அவை வழங்கப்பட்டன என்பது குறித்து அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 20,000 செலவில் 01 Air Compressor கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தேவைகளும் நியமங்களும் முறைப்படி இனங்காணப்பட்டிராமையால் பணிக்குப் பொருத்தமானதும் தேவையானதுமான உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்ய முடியாதிருந்தது. மேலும், அதன் வர்த்தகப் பெயர், தொடர் இலக்கம் போன்ற இனங்காண்பதற்கான நியமங்கள் இன்வொய்சிலோ அல்லது வேறெந்தப் பதிவேட்டிலுமோ குறிப்பிடப்பட்டிராததுடன் 4005 ஆம் இலக்க வேலைப்பத்திரத்திற்கு அது பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அதற்குரிய கோவையின் பிரகாரம் உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது குறித்தோ அல்லது குறித்த பணிக்கு அது வழங்கப்பட்டது குறித்தோ அறிக்கையிடப்படவில்லை. குறித்த இயந்திரம் பொருட் பதிவேட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், எப்பொருட் பதிவேட்டில் அவ்வாறு பதிவு செய்யப்பட்டது என்று இனங்காண முடியாதிருந்ததுடன், நேரடிப் பரிசோதனையின் பொருட்டு HITECH BRAND எனும் வர்த்தக அடையாளம் கொண்ட 01 Air Compressor சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், பொருட்பதிவேட்டில் பதியப்பட்டதற்கான இனங்காணப்படக்கூடிய இலக்கம் ஒன்று அதில் குறிப்பிடப்பட்டிருக்காமையால் குறித்த தினத்தன்று கொள்வனவு செய்யப்பட்டது அந்தப் பொருள்தானா என்பதை உறுதி செய்ய முடியாதுபோயிற்று.

(உ) தொழிற்சாலையில் இணைப்பு வேலைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான உபகரணங்களும் ஊழியர்களும் இருக்கையில் 2012 திசெம்பர் 05 ஆந் திகதியன்று ரூபா 2,142,000 செலவில் வெளி நபர்கள் மூலம் இணைப்பு வேலைகள் நடைபெற்றிருந்தன. சேவை பெறப்பட்டதற்கான 2083 ஆம் இலக்க வேலைப்பத்திரத்திற்குரிய கோவையின் பிரகாரம் சேவை பெறப்பட்டதை உறுதிசெய்ய முடியாது இருந்ததுடன், எக்காலப்பகுதியின் போது சேவை பெறப்பட்டது என்பதும் கூறுவிலைகளது அல்லது இன்வொய்சினது பெறுமதி கணிப்பிடப்பட்ட முறையைத் தெரிவுபடுத்தும் ஆவணச் சான்றிருக்கவில்லை.

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

திணைக்களம் ஈடுபட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றிருந்தன. அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் வருமாறு.

**பொருட்கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகல்**

(i) மீளாய்வாண்டின்போது ரூபா 4,592,228 பெறுமதியான மரக்குற்றிக் கையிருப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து 35 முதல் 98 நாட்களின் பின்னர் கொள்வனவிற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(ii) 2012 பெப்ரவரி 08 ஆந் திகதியன்று முறையான கொள்வனவு நடைமுறைப் பிரகாரம் போட்டியாளர் கூறு விலைகளைக் கோராது ரூபா 3,970,111. செலவில் மஹோகனி மரக்குற்றிகள் நேரடியாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திருந்து பெறப்பட்டிருந்தது. அதில் ரூபா 3,229,557 பெறுமதியான கையிருப்பு 2013 மார்ச் 29 ஆந் திகதியளவிலும் மழையிலிருந்து பாதுகாக்கப்படுதலின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்டதும் உள்ளவாறானதுமான பதவியணி

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 15 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 05 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 156 | 125 | 31 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 445 | 346 | 99 |
| | மொத்தம் | 629 | 491 | 138 |

### (ஆ) உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடும் காலத்தைக் கட்டுப்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வேலைக்குச் சமுகமளித்தல் மற்றும் செல்லுதல் தொடர்பான நேரத்தை மீளாய்வு செய்தும் அதிகாரம் மற்றும் நேர மாற்றத்தை நியாயமான சந்தர்ப்பங்களை குறிப்பிட்டு அதற்காக மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் அதிகாரம் என்பன ஒவ்வொரு பிரிவுத் தலைவர்களிடமும் எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மாற்றத்தை அங்கீகரிக்கும் உத்தியோகத்தர் யாரென்பதை இனங்காணக்கூடியவாறு உத்தியோகத்தரது பெயர், பதவி என்பன குறிப்பிடப்பட்டு கையெழுத்திடப்பட்டிருக்கவில்லை. அங்கீகாரத்துடன் விண்ணப்பக் கடிதம் இலக்கமிடப்பட்டு திகதிவாரியாக தொடரிலக்கப்படி முறைப்படி அவை கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எதுவித விசேட சந்தர்ப்பங்களும் ஏற்படாதிருந்த தறுணங்களிலும் 15, 20, 45 நிமிட கால தாமதம் தொடர்பான நேர மாற்ற அங்கீகாரம் நிரந்தரமாகவே வழங்கப்பட்டிருந்தது. தெரிவுச் செவ்வைக்கு உள்ளான 09 உத்தியோகத்தர்களுக்கிடையே 05 உத்தியோகத்தர்களின் வருதல், செல்தல்

ஆகிய நேரங்களில் அங்கீகாரமின்றி மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. அவர்களுள் ஒரு உத்தியோகத்தரது நேரமாற்றத்திற்கான அங்கீகாரம் பின்னர் மோசடியாகத் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மற்றுமொரு உத்தியோகத்தர் அங்கீகாரமின்றி நேரங்களில் மாற்றங்களை மேற்கொண்டவாறு கடமைக்கான படியைப் பெற்றிருந்தார். இரு உத்தியோகத்தர்களது லீவுப்பதிவேட்டில் கடமை லீவாகக் குறிப்பிடப்பட்டிருந்த சில நாட்களுக்கு கடமை லீவுக்கான அங்கீகாரம் இல்லாதிருந்தன.

## 4. தலைப்பு – 311 - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 11 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள், இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 4.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்ற வகையிலான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் நியாயமுறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 4.3 கணக்காய்வு அவதானிப்புகள்

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இங்கு (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 4.4 இலிருந்து 4.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் தவிர திருப்திகரமாக தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## (அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணியிராமை

(i) திணைக்களத்தினால் கீழ்க்காணப்படும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையானச் சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| கணனி மற்றும் மென்பொருள் தொடர்பில் வெவ்வேறாக பேணப்படவேண்டிய நிலையான சொத்துப்பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

(ii) திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் முன்வைக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டில் முன்வைக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன், அந்த வினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 27,022,852 ஆகும்.

## (ஆ) நிதியேற்பாட்டு எல்லையினை விஞ்சி கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்

மீளாய்வாண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,000,000 தொகையான சேவைக்கட்டண வருமானம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாதிருந்ததுடன், அதற்காக திணைக்களத்தின் செலவின விடயங்கள் சிலவற்றிற்கு மிகைக் கட்டணம் செய்யப்பட்டிருந்தது. அதனூடாக அந்த செலவின விடயங்களின் செலவுகள் குறைக்கப்பட்டமையால் செலவிடக்கூடிய நிதியேற்பாட்டின் பெறுமானம் அதிகரித்திருந்தது. அவ்வாறு அதிகரித்துக்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டினைப் பயன்படுத்தி வாகனப் பழுதுபார்த்தல், காகிதாதிகளின் கொள்வனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு ஆகிய மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 700,000 தொகையும், 2011 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டிருந்த சம்மேளனமொன்றிற்காக ரூபா 300,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அந்த தவறான கணக்கீடு காரணமாக நிதிப்பிரமாணம் 94 இல் காணப்படும் ஏற்பாடுகளுக்கு முரணாக, அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டினை விஞ்சி மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினங்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) நோக்கங்களுக்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்**

கடந்த ஆண்டின் எல்லையினை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 300,000 தொகையான பொறுப்புக்கள், ஏனைய குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தி தீர்க்கப்பட்டிருந்தது.

**(ஈ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விடய இலக்கம் 31101 கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா ,117,434 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகளை அறவிடத் தவறியிருந்தது.

(ii) அந்த நிலுவை கடன் மீதிகளிடையே தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முற்றிலும் முரணாக 1997 ஆம் ஆண்டு உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்டிருந்த ஆதனக் கடனில், 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகவிருந்த கடன் மீதியான ரூபா 121,305 தொகைக்குரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கான இயலுமை இல்லாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை.

(iii) மொத்த நிலுவைக் கடன் மீதி ரூபா 357,217 தொகைக்குரிய கடன் கோவைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமையால் அந்தக் கடனை அறவிடுவதற்கு உள்ள வழிமுறைகள் அல்லது கடனை அறவிடாமைக்கான காரணங்களையேனும் வெளிப்படுத்த முடியாதிருந்தது. கோவைகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களால் இந்தக் கோவைகளை கண்டறிய முடியாதுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.4.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களை விழிக்கும் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம், 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டமொன்று திணைக்களத்தினால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அந்த திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம், திணைக்களத்தினால் தயாரிக்கப்படவேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் நிதியாண்டு நிறைவடைந்து 150 தினங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 நவம்பர் 01 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்த்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4.3 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய பீஏஎம்/2009 (1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, நிர்மாணம், பொறியியலாளர் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினாலேனும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை செயற்படுத்தல்

சரியான படிமுறைகள் மற்றும் பின்தொடரும் எண்ணத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்படாமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை செயற்படுத்தும் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பில் தகவல்கள் பேணியிராமை**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமதி ரூபா 11,154,709 ஆக இருந்ததுடன் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி அந்தக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமானம் அல்லது உரித்து திணைக்களத்திற்கு உள்ளதென உறுதிப்படுத்துவதற்குத் தேவையான உரித்துரிதிப் பத்திரம் அல்லது அதற்குச் சமனான ஏனைய சான்றுகள் மற்றும் ஏனைய தரப்பினருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் கையளிப்பிற்கு பெற்றுக்கொண்ட அங்கீகாரம், கையளிப்புக் கடிதம் மற்றும் பொறுப்பேற்றுக் கொண்டமைக்கான சான்றிதழ் போன்ற தகவல்களும் திணைக்களத்திடம் காணப்படவில்லை.

## 4.6 இணங்காமைகள்

### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| | நிதிப்பிரமாணம் 94(1) | 1,838,761 | மீளாய்வாண்டின் வருடாந்த மதிப்பீடு நிதியேற்பாட்டினை விஞ்சி பொறுப்புக்களுக்காக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தது. |
| | நிதிப்பிரமாணம் 102, 104, 109 | 60,389 | வாகன விபத்தொன்று தொடர்பில் பரிசோதனைகள் நடாத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்களை நிச்சயப்படுத்தியிராததுடன் நட்டத்தினை அறவிடுவதற்கே பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| | 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2012 ஒக்தோபர் 07 ஆந் திகதிய BD/A/AO/Bc ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 2,160,000 | தனியார் நிதி நலன்கள் கிடைக்கும் வகையில் 06 உத்தியோகத்தர்களுக்கு பிரயாணக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | அரச நிதிச் சுற்றறிக்கை | | |
| | 2006 யூலை 30 ஆந் திகதிய 422 ஆம் இலக்க சுற்றறிக்கை | | 2002 திசெம்பா 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பில் விரிவான அறிக்கையொன்று |

அரச நிதித் திணைக்களத்திற்கு உரித்தான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமானம், உரித்து மற்றும் பெறுமதி போன்றவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதுபோயிருந்தது.

**4.7 முகாமைத்துவ நலிவுகள்**

**(அ) வருமான சேகரிப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுற்றுலா விடுதிகள் மற்றும் ஓய்வூதிய மண்டபங்களில் வருமான சேகரித்தல் மற்றும் அனுப்பி வைத்தல் அதிகாரம் யாருக்கும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்த வாடகை வருமானம், சுற்றுலா விடுதி மற்றும் ஓய்வூதிய மண்டபங்களின் பொறுப்பாளர்களை ஈடுபடுத்தி சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அடியிதழ் புத்தகப் பதிவேடு முறையாக பேணப்படாதிருந்ததுடன் பற்றுச்சீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. பற்றுச்சீட்டுப் புத்தகங்களை பொறுப்பேற்றுக்கொண்ட பற்றுச்சீட்டொன்று பெற்றக்கொண்டு கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பற்றுச்சீட்டுப் புத்தகங்களின் தேவைப்பாட்டினை குறிப்பிட்டு கிளை அலுவலக தலைவரொருவரின் எழுத்துமூல வேண்டுகோளொன்று முன்வைக்கப்பட்டிராததுடன் பதவிநிலை உத்தியோகத்தரொருவரின் அங்கீகாரமின்றி பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

(iv) மாதமொன்றிற்கோ அல்லது இரண்டு மாதங்களுக்கு பயன்படுத்தக்கூடிய பற்றுச்சீட்டுக்கள் பெருந்தொகையான புத்தகங்கள் கிளை அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கும் போது அதற்கு முன்னர் வழங்கிய புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டு முடிவடைந்துள்ளதா என்பதும் அல்லது பயன்படுத்தி முடிந்த புத்தகங்கள் தலைமை அலுவலகத்திற்கு மீளக் கிடைத்துள்ளதா என்பதை உறுதிப்படுத்தாமல் புதிய பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன.

(v) கதிர்காமம், மஹியங்கனை, பொலன்னறுவை, தெவிநுவர மற்றும் அநுராதபுரம் ஆகிய கிளை அலுவலகங்களுக்கு மற்றும் தலைமை அலுவலகத்தின் காசாளருக்கு 2000 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டக் காலப்பகுதியினுள் வெளியிடப்பட்டிருந்த மொத்தப் பற்றுச்சீட்டப் புத்தகங்களின் எண்ணிக்கை 1,211 ஆக இருந்ததுடன் அவற்றுள் பயன்படுத்தப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு மீளக் கையளிக்கப்பட்டிருந்த பற்றுச்சீட்டப் புத்தகங்களின் எண்ணிக்கை 102 ஆகும். அதன் பிரகாரம் 1,109 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் தலைமை அலுவலகத்திற்கு மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

கையளிக்கப்படாத புத்தகங்கள் வருமான சேகரிப்பிற்காக பயன்படுத்தப்பட்ட சான்றுகள் காணப்படவில்லை. 2000 ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியினுள் கிளை அலுவலகங்களிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த அறிக்கைகளேனும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) கிளை அலுவலகங்களிலிருந்து தலைமை அலவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட பணம், கிளை அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற வருமானம் அறிக்கையுடன் மற்றும் கிளை அலுவலகங்களால் வெளியிடப்படுகின்ற பற்றுச்சீட்டுக்களின் பிரதிகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(vii) கிளை அலுவலகங்களால் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பணத்திற்கான பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(viii) கிளை அலுவலகங்களால் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பணம், தலைமை அலுவலகத்தின் காசுப்புத்தகத்திற்கு உடனடிபயாக வரவு வைக்கப்பட வேண்டுமெனினும் தாமித்த வரவு வைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) சுற்றுலா விடுதிகளை சுற்றுலாப்பயணிகளுக்கு ஒதுக்குதல் மற்றும் பணம் அறிவிடும் பணிகளில் திணைக்களம் மாத்திரமின்றி விடுதிப் பொறுப்பாளர்களும் ஈடுபட்டிருந்ததுடன் எதுவித உள்ளக கட்டுப்பாடுமின்றி விடுதிப் பொறுப்பாளருக்கு காசு அறிவிடும் பற்றுச்சீட்டப் புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தமையால் நிதி மோசடிகள் இடம்பெறுவதற்கு பெருமளவில் சந்தர்ப்பமுள்ளமை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

**4.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 ஆந் தகிதியில் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் | உள்ளவாறான பதவியணியின் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 40 | 14 | 26 |
| (ii) | மூன்றாம் நிலை | 13 | 02 | 11 |
| (iii) | இரண்டாம் நிலை | 122 | 80 | 42 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 47 | 26 | 21 |
| | மொத்தம் | 222 | 122 | 100 |